பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 07 2025 **WEDNESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - பிரேசில் இடையேயான வர்த்தகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் 20 பில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உயரிய விருதை பிரேசில் அதிபர் திரு **Lula da Silva'**- வழங்கி கௌரவித்தார்.

3. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் 96 சதவீத உறுப்பினர்களுக்கு சென்ற நிதியாண்டிற்கான வட்டித் தொகை வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

4. கேரளாவில் நிஃபா வைரஸ் பரவலையடுத்து, தமிழக எல்லையோர மாவட்டங்களில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

5. உலகக்கோப்பை வில்வித்தை தகுதிச்சுற்று போட்டிகளில் இந்தியாவின் ரிஷப் யாதவ், ஜோதி சுரேகா ஆகியோர் தனிநபர் மற்றும் குழு பிரிவில் முன்னிலை பெற்றுள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி பிரேசில் உடனான வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அதிபர் திரு **'Luiz Inacio Lula da Silva'**-வுடன் பேச்சு நடத்தினார்.

பிரேசில் அதிபர் உடனான சந்திப்புக்கு பின்னர் பிரேசிலியாவில் கூட்டாக செய்தியாளர்களுக்கு திரு நரேந்திர மோடி பேட்டியளித்தார்.

அப்போது அந்நாட்டுடனான வர்த்தகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் 20 பில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்திய ஏற்றுமதியாளர்கள் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, அந்நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்துவதற்கு இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து ஆலோசித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் யுபிஐ டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை சேவையை பிரேசில் நாட்டில் செயல்படுத்துவதற்கான திட்டத்தையும் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிக்கையில் உறுதி செய்துள்ளார்.

மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி, வேளாண் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் தாம் பேச்சு நடத்தியதாக அதில் கூறியுள்ளார்.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு பிரேசில் நாட்டின் உயரிய விருதான **'Grand Collar of the National Order of the Southern Cross '** என்ற விருதை அந்நாட்டு அதிபர் வழங்கி கௌரவித்தார்.

இதற்காக, பிரதமர் திரு நரேந்திர மோடி, நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இருதரப்பு நல்லுறவுகளை வலுப்படுத்துவதற்கு பிரதமரின் பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுவதாக அந்நாட்டு அதிபர் தெரிவித்தார்.

மேலும், பஹல்காம் தீவிரவாத தாக்குதலை பிரேசில் கண்டித்ததுடன், அதன் பின்னர் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைக்கு ஆதரவு அளித்ததற்காக அந்நாட்டு அதிபருக்கு பிரதமர் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

தமது இந்த சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், ரியோடிஜெனிரோவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்றதும், தற்போது அதிபருடனான இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியதும் ஆக்கப்பூர்வமான வகையில் அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருதலைவர்களின் சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கிழக்கத்திய நாடுகளுக்கான வெளியுறவு அமைச்சக செயலாளர் திரு குமரன், பிரேசில் நாட்டிற்கு இந்திய மருந்துப்பொருட்கள் இறக்குமதியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை அந்நாட்டு அதிபர் வரவேற்றதாக கூறினார்.

சுற்றுலாப்பயணிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு விசா நடைமுறைகளை எளிமைப்படுத்துவது தொடர்பாகவும் பிரதமரும், பிரேசில் அதிபரும் ஆலோசனை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

இருதலைவர்களின் சந்திப்புக்கு பின்னர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எத்தனால் கலந்த உயிரி எரிபொருள் உள்ளிட்ட துறைகளில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டதாகவும் திரு குமரன் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சுற்றுப்பயணத்தின் நிறைவாக பிரேசிலியாவிலிருந்து நமீபியா புறப்பட்டு சென்றார்.

<<<<<<>>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான **EPFO** அதன் 96 சதவீத உறுப்பினர்களுக்கு சென்ற நிதியாண்டிற்கான வட்டித் தொகையை வரவு வைத்திருப்பதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நான்கு கோடி உறுப்பினர்களில் இதுவரை மூன்று கோடியே 20 லட்சம் பேருக்கு வட்டித் தொகை வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

எஞ்சியுள்ள ஊழியர்களுக்கும், அவர்களின் கணக்கில் விரைவில் வட்டி வரவு வைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை அறிவித்த இரண்டு மாதங்களில் தமது அமைச்சகம் இந்த நடைமுறையை நிறைவு செய்திருப்பதாக திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<>>>>>>

திமுக நிர்வாகிகளுடன் வெளிப்படையான உரையாடல்களை தாம் நடத்துவதன்மூலம் புது உற்சாகம் ஏற்படுவதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், கட்சியினர் உடனான சந்திப்பின்மூலம், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை நோக்கிய நம்பிக்கை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

அஇஅதிமுக ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட திட்டங்களை தமது ஆட்சியில் கொண்டுவரப்பட்டது போன்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் செயல்படுவதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

மக்களை காப்போம் - தமிழகத்தை மீட்போம் என்ற சுற்றுப்பயணத்தின் இரண்டாவது நாளான நேற்று, கோவை வடவள்ளி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

அப்போது கோவை மாவட்டத்தில் அஇஅதிமுக நிறைவேற்றிய பல்வேறு திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகு குறிப்பிட்ட சில திட்டங்களை திறந்துவைத்துவிட்டு, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை போன்று வெளிப்படுத்திக்கொள்வதாக திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

கேரளாவில் நிஃபா வைரஸ் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்த நிலையில், தமிழகத்தில் அந்த தொற்று பரவாமல் தடுக்க எல்லையோரா மாவட்டங்களில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக – கேரள எல்லையோர மாவட்டங்களான தென்காசி, தேனி, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களுக்குள் வரும் வாகனங்கள் தீவிர சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்படுவதாக எமது தென்காசி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*('Voice Byte - ' தென்காசி செந்தில் - 48 'Sec.)'*

<<<<<<>>>>>>

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து 43 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கும், பரிசல் பயணம் மேற்கொள்ளவும் 15-ஆவது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*('Voice Byte - ' தருமபுரி தண்டபாணி – 44 'Sec.)'*

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

பிரான்ஸ் நாட்டின் **'Marseille** நகரில் காட்டுத்தீ பரவி வருவதால், அங்கு விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன

-------------------

பாகிஸ்தானின் **Khyber Pakhtunkhwa** மாகாணத்தில் உள்ள கொச்சி பசார் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு தீயணைப்பு வீரர்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

-----------

நாகாலாந்து முதலமைச்சர் திரு **'Neiphiu Rio '** தலைமையிலான உயர்நிலைக்குழுவினர் ஜப்பான் சென்றுள்ளனர்.

--------------

உத்தரப்பிரதேச மாநிலம் மீரட்டில் சர்தார் வல்லபாய் பட்டேல் வேளாண் பல்கலைக்கழகத்தில் புதிய தொழில்நுட்ப மையத்தை மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தொடங்கிவைத்தார்.

--------------------

கர்நாடக மாநிலத்தில் லஷ்கர் இ தொய்பா தொடர்பான வழக்கு குறித்து தேசிய புலனாய்வு அமைப்பினர் நடத்திய சோதனையில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

---------------

தலைநகர் தில்லியில் அரசுப்பள்ளிகளில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைப்பதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

----------------

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் கன்னியாகுமரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

--------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலில் உலக நலன் வேண்டி 108 வலம்புரி சங்குகளில் புனித நீர் வைத்து சிறப்பு பூஜை நடைபெற்றது.

**<<<<<<END>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தை தகுதிச்சுற்று போட்டிகளில் இந்தியாவின் ரிஷப் யாதவ், ஜோதி சுரேகா ஆகியோர் தனிநபர் மற்றும் குழு பிரிவில் முன்னிலை பெற்றுள்ளனர்.

ஸ்பெயினின் மேட்ரிட்டில் தொடங்கியுள்ள இப்போட்டியில், தனிநபர் பிரிவில் ரிஷப் யாதவ் 716 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளார்.

இவர்களுக்கு அடுத்தப்படியாக **'Priyansh, Aman Saini** ஆகியோர் 10 மற்றும் 11-ஆவது இடங்களை பிடித்துள்ளனர்.

ஆசிய போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்ற ஜோதி சுரேகா **'Vennam'** மகளிர் குழு பிரிவில் 715 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார்.

**'Parneet Kaur, Prithika Pradeep** ஆகியோர் மகளிர் குழு பிரிவில் ஏழாவது மற்றும் பத்தாவது இடத்தை பிடித்துள்ளனர்.

இதன்மூலம், இந்தியா குழு பிரிவில் முன்னிலை வகிக்கிறது.

<<<<<<END>>>>>>